2023 ஏப்ரல் 1]
95—

பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கம்

***3894—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்களைக் கணினிமயமாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–40

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவுத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 1,715 பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்களைக் கணினிமயமாக்கும் பணிக்காக ரூ.1.53 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை நிறுவனம் மூலமாக ஆன்லைன் வழியாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, குறைந்த விலைப்புள்ளி சமர்ப்பித்த M/s. Vertace Consultants *என்ற நிறுவனத்திற்குப் பணி வழங்கப்பட்டுள்ளது. இப்பணியைக் கண்காணிப்பதற்கு கூடுதல் பதிவாளர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டு, அந்தப் பணிகள் தற்போது விரைவாக நடைபெற்று வருகின்றன. வரும் ஏப்ரல் மாதத்தில் முதற்கட்டமாக 10 பணியாளர் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் கணினிமயமாக்கப்பட்டு, இவ்வாண்டு இறுதிக்குள் 1,715 பணியாளர் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கும் இந்த வசதி பெற்றுத் தரப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, பணியாளர்களின் வாழ்க்கையை மேன்மைப்படுத்துவதற்காக, பணியாளர் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. எல்லா சங்கங்களும் இந்தக்*

காலக்கட்டத்தில் கணினிமயமாக்கப்பட்டிருந்தாலும், இந்தச் சங்கத்தில் முழுமையாகக் கணினிமயமாக்கப்படாமல் இருக்கிறது. அதனால், வேலையை சீராகவும், சிறப்பாகவும் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. பணியாளர்களுக்கு அதிகபட்சமாக 15 இலட்சம் ரூபாய்தான் கடன் கொடுக்கிறார்கள். குறைந்தபட்சம் உறுப்பினரது பிள்ளைகள் பயன்பெறும் வகையில் கல்விக் கடன் கொடுக்க வேண்டும். நலிவடைந்த சங்கங்களை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த மாதம் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடக்கவிருக்கிறது. தனி அலுவலரை நியமிக்காமல் இந்தத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும். வாடகைக் கட்டடத்தில் இயங்கும் சங்கங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுக்கவும், ATM வசதி வழங்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்த கேள்விக்கான பதிலை நான் தெளிவாகத் தெரிவித்திருக்கிறேன். தொடர்ந்து, வாடகைக் கட்டடங்களில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும், பணியாளர்களுக்கு வழங்கப்படுகின்ற கடன் தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் என்றும் கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள்.

அது, அந்தந்தத் தொழிலாளர்கள் பெறுகின்ற ஊதியம் மற்றும் எந்தளவிற்கான கடன் வழங்குவது போன்ற வரையறையைப் பொறுத்து அவர்களுக்குக் கடன் வழங்கப்படும். வாடகைக் கட்டடங்களில் இயங்குகின்ற அந்தச் சங்கங்களையெல்லாம் சொந்தக் கட்டடங்களில் இயங்குவதற்கான முயற்சிகள் மற்றும் அவற்றை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் படிப்படியாக தொடர்ந்து மாநில அரசினுடைய முயற்சியிலும், அதேபோல் ஒன்றிய அரசினுடைய நிதியைப் பெற்றும், மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வெகுவிரைவில், இன்னும் ஓராண்டுக் காலத்தில் இந்தத் துறை புத்துயிர் பெற்ற துறையாக மாற்றியமைக்கப்படும்.

2023 ஏப்ரல் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா காலத்தில் தனியார் நிறுவனங்களில் பணியாற்றிய பலருக்கு ஊதியம் கிடைக்காமல் இருந்தது. அதிகமான கடன் பெற்றவர்கள் அவற்றைத் திருப்பி கொடுக்காத சூழல் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்குக் கடனை திருப்பி செலுத்த தகுந்த நேரம் வழங்கவோ, கடனைத் திருப்பி செலுத்துவதற்கு உரிய வட்டியைத் தள்ளுபடி செய்யவோ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு சங்கங்களுக்கும், தொழிலாளர்களுக்கும் தனிப்பட்ட சில தகுதிகள் மற்றும் இதர வரையறைகளெல்லாம் உள்ளன. ஆகவே, அந்தந்த சங்கங்களுடைய நிதி நிலைமைகளைப் பற்றி ஆங்காங்கு அமைந்திருக்கக்கூடிய அந்த சங்கங்களுடைய நிர்வாகத்தின் மூலமாக உரிய தீர்வுகளை மேற்கொள்வது ஏதுவாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 96, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

96—

இலவச மின்சாரம்

***53175—திரு. T.K. அமுல் கந்தசாமி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—